2017 மார்ச் 24] [திரு. கே.ஏ. செங்கோட்டையன்]

குழுக்களின் பதவிக்காலம் முடிவடைய வரையறுக்கும் பேரவை விதிகள் முறையே 227 (2), 239 (2), 248 (2), 253 (2), 261 (3), 264 (2) மற்றும் 268 (iv) ஆகியவற்றைத் தளர்த்தி, அக்குழுக்களில் தற்போது பணியாற்றுகின்ற உறுப்பினர்களே தொடர்ந்து 2018 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 31 ஆம் நாள் வரை அக்குழுக்களில் பணியாற்ற வேண்டும். மேலும், பேரவை விதி 231 (2)–ஐத் தளர்த்தி அலுவல் ஆய்வுக் குழுவில் தற்போது பணியாற்றிவரும் உறுப்பினர்களே அடுத்த குழு நியமனம் செய்யப்படும் வரை பணியாற்ற வேண்டும்"

எனும் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

அலுவல் ஆய்வுக் குழு உறுப்பினர்கள் தொடர்ந்து பணியாற்றுவார்கள். அவை உரிமைக் குழு, சட்ட விதிகள் ஆய்வுக் குழு, அரசு உறுதிமொழிக் குழு, அவைக் குழு, மனுக்கள் குழு, நூலகக் குழு, பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு, அலுவல் ஆய்வுக் குழு ஆகிய குழுக்களின் பதவிக் காலம் 31–3–2018 வரை ஓராண்டிற்கு நீட்டிக்கப்படுகிறது.

பிற்பகல் 3–20

(இ) பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கப்பெறுதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கப்பெறக் கோரும் தீர்மானம். மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

[திரு. கே.ஏ. செங்கோட்டையன்] [2017 மார்ச் 24

"பேரவை விதி 25(1)—ன்கீழ், பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கப்பெறலாம்"

என்னும் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களுடைய தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கப்படுகிறது. நன்றி, வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 3–20 மணிக்கு, மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கப்பெற்றது.

7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

38. 2015–2016 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தின் அறுபத்தேழாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619—ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ்—ஆங்கிலம்)

39. 2015–2016 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சரிகை நிறுவனத்தின் நாற்பத்து நான்காவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619—ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ்—ஆங்கிலம்)

40. 2015–2016 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தின் ஆண்டு நிதிக் கணக்குகள் மற்றும் தணிக்கை அறிக்கை. [1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 42/1989) 35(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ்—ஆங்கிலம்)